# QB365 Question Bank Software Study Material

## பேரியல் பொருளாதாரம் முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 12ம் வகுப்பு

## பொருளியல்

மொத்த மதிப்பெண் : 75

**2 மதிப்பெண் வினாக்கள்**

10 x 2 = 20

1) பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.

**பதில் :** பேரியல் பொருளாதாரம் என்பது ஒட்டு மொத்தங்களாகிய நாட்டு வருமானம், வேலைவாய்ப்பு நாட்டு உற்பத்தி முதலானவற்றை உள்ளடக்கியது. பேரியல் பொருளாதாரத்தை வருவாய்க் கோட்பாடு' எனவும் அழைப்பர்.

2) பணவீக்கம் என்ற பதத்தின் பொருள் தருக.

**பதில் :** பணவீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிப்பதாகும்.

3) "பொருளாதாரம்" என்பதன் பொருள் யாது?

**பதில் :** பொருளாதாரம் என்கிற கருத்தினை ஏ.ஜே. பிரவுண் என்பவர் "மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையை குறிப்பது என்று வரையறுத்துள்ளார்

(அல்லது)

"நுகர்வோரின் விருப்பங்களை நிறைவு செய்வதற்கானப் பொருள்களையும், பணிகளையும் தயாரிக்கும் உற்பத்தியாளர், பணியாளர்களுக்கிடையே உள்ள கூட்டுறவே. பொருளாதார அமைப்பு" என ஜே.ஆர். ஹிக்ஸ் (J.R. Hicks) கூறுகிறார்.

4) வளர்ச்சி நிலை அடிப்படையில் பொருளாதாரங்களை வகைப்படுத்துக.

**பதில் :** வளர்ச்சி நிலை 4 வகையாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. வளர்ந்த பொருளாதாரம்
2. வளர்ச்சி குன்றிய பொருளாதாரம்
3. வளராத பொருளாதாரம்
4. வளரும் பொருளாதாரம்

5) முதலாளித்துவம் என்றால் என்ன?

**பதில் :** 1. முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தந்தை ஆடம் ஸ்மித் ஆவார்.

2. முதலாளித்துவப் பொருளாதாரம் தடையில்லாப் பொருளாதாரம் மற்றும் அங்காடிப் பொருளாதாரம் எனவும் அழைக்கப்படுகிறது.

3. இங்கு பொருளாதார நடவடிக்கைகளை தீர்மானிப்பதில் அரசாங்கத்தின் பங்கு குறைவாகவும், சந்தையின் பங்கு அதிகமாகவும் இருக்கும்.

4. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் தனியார் வசம் இருக்கும். பண்டங்கள், பணிகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இலாப நோக்கத்தை முதன்மையாகக் கொண்டிருக்கும்.

6) பொருளாதார மாதிரியின் இலக்கணம் தருக

**பதில் :** 1. மாதிரி என்பது உண்மை சூழலை எளிமையாக பிரதிபலிப்பது ஆகும்.

2. பொருளாதார வல்லுநர்கள், பொருளாதார நடவடிக்கைகள், அவற்றுக்கிடையேயான உறவுகள், நடத்தைகள் பற்றி விவரிப்பதற்கு மாதிரிகளைப் பயன்படுத்துகின்றனர்.

3. மாதிரி என்பது பொருளாதாரம் எவ்வாறு இயங்குகிறது என்பதை விளக்குகிறது.

7) "வருமான சுழல் ஓட்டம்" - வரையறு.

**பதில் :** 1. ஒரு பொருளாதாரத்தின் வருமான சுழல் ஓட்ட மாதிரியானது, அந்தப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குவதாகும்.

2. இது பொருளாதார முகவர்களாகிய நிறுவனம், குடியிருப்பு, அரசாங்கம் மற்றும் நாடுகளிடையே வருமானம், பண்டங்கள், பணிகள், உற்பத்திக் காரணிகளின் ஓட்டத்தை காண்பிப்பதாகும்.

8) பொருளாதார அமைப்பின் வரையறை என்ன?

**பதில் :** ஏ.ஜே. பிரவுண் "மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்து கொள்ளும் முறையை குறிப்பது" ஜே.ஆர். ஹிக்ஸ்

"நுகர்வோரின் விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கான பொருட்கள் மற்றும் சேவைகளை தயாரிக்கும் உற்பத்தியாளர் மற்றும் பணியாளர்களுக்கிடையே உள்ள கூட்டுறவே பொருளாதார அமைப்பு".

9) சமத்துவ பொருளாதார அமைப்பு என்றால் என்ன?

**பதில் :** அரசே பெரும்பான்மையான தொழில்களை உரிமம் கொண்டு மற்றும் கட்டுப்படுத்தி ஒரு சமுதாயத்தினை ஒழுங்குபடுத்தும் முறை.

10) தனிமனிதனுக்கு சரியானவை ஒரு நாட்டிற்கு சரியாக இருக்காது - விளக்குக.

**பதில் :** (i) சேமிப்பு தனி மனிதனுக்கு நன்மை, ஆனால் நாட்டிற்கு அல்ல.
(ii) நாட்டில் அனைத்து மக்களும் சேமித்தால், தேவை குறையும், முதலீடு குறையும், வேலைவாய்ப்பு குறையும்

**3 மதிப்பெண் வினாக்கள்** 10 x 3 = 30

11) பேரியல் பொருளாதாரத்தின் முக்கியதுவத்தைக் குறிப்பிடுக.

**பதில் :** **பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவங்கள்:**
1. ஒரு பொருளாதார அமைப்பின் ஒட்டு மொத்த செயல்பாடுகளைப் புரிந்து கொள்ளவும், அதற்குத் தேவையான சரியான யுத்திகளை மாற்றவும், அடிப்படை சிக்கல்களுக்குத் தீர்வு காணவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.
2. எதிர்கால சிக்கல்களைப் புரிந்துக் கொள்ளவும், வருங்காலத் தேவைகளையும், அறை கூவல்களையும் எதிர்கொள்வதற்கும், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை களை எடுப்பதற்கும் பேரியல் பொருளாதாரம் பயன்படுகிறது.
3. நடப்புப் பிரச்சனைகளை அறிவியல் பூர்வ விசாரணை மூலம் அறிய பேரியல் பொருளாதாரம் வாய்ப்பளிக்கிறது. பொருளாதாரக் குறியீடுகளை பகுத்தாயவும் அவற்றை ஒப்பிடவும் இது உதவுகிறது.
4. பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காணவும். சரியான கொள்கைகளை உருவாக்கவும். எதிர்காலத்தில் நடக்கவிருப்பனவற்றை முன்கணிக்கவும் இது உதவுகிறது.

12) பொருளாதார முறைகளின் வகைகளை குறிப்பிடுக.

**பதில் :** **1. வளர்ச்சி நிலை:**
வளர்ந்த, வளராத, முன்னேறாத மற்றும் வளரும் பொருளாதார அமைப்புகள்.
**2. நடவடிக்கைகளின் முறை:**
முதலாளித்துவ, சமத்துவ மற்றும் கலப்பு பொருளாதார அமைப்புகள்.
**3. நடவடிக்கைகளின் அளவு:**
சிறிய மற்றும் பெரிய பொருளாதார அமைப்புகள்.
**4. செயல்படும் தன்மை:**
நிலையான மற்றும் இயங்கும் பொருளாதார அமைப்புகள்.
**5. செயல் பரப்பு தன்மை:**
மூடிய மற்றும் திறந்தவெளி பொருளாதார அமைப்புகள்.
**6. முன்னேற்ற தன்மை:**
பழைமையான மற்றும் நவீன பொருளாதார அமைப்புகள்.
**7. தேசிய வருவாய் அளவு:**
குறைந்த வருவாய், இடைநிலை வருவாய் மற்றும் அதிக வருவாய் பொருளாதார அமைப்புகள்.

13) முதலாளித்துவத்தின் சிறப்பினை வரிசைப்படுத்துக.

**பதில் :** **தனியார் சொத்துரிமையும் பரம்பரைச் சட்டமும்:** முதலாளித்துவத்தின் முக்கிய இயல்பு என்னவெனில் உழைப்பு, மூலதனம், இயந்திரங்கள், சுரங்கம் போன்ற அனைத்து வளங்களும் தனிமனிதர்களுக்குச் சொந்தமாக இருக்கும்.
**தெரிந்தெடுப்பதில் சுதந்திரம் :** ஒவ்வொரு தனிமனிதரும் தங்களது வேலையைத் தேர்ந்தெடுப்பதிலும், உற்பத்தி செய்யும் பண்டங்களைத் தேர்ந்தெடுப்பதிலும், வியாபார இடத்தை தெரிவு செய்வதிலும் முழு சுதந்திரம் பெற்றிருப்பர்.
**இலாப நோக்கம்:** முதலாளித்துவப்பொருளாதாரத்தில், அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளிலும் இலாபம் பெறுவதே உந்து விசையாகக் காணப்படும்.
**போட்டியில் சுதந்திரம் :** பண்டங்கள் சந்தை, காரணிகள் சந்தை ஆகிய இரண்டிலும் முழு சுதந்திரம் உண்டு. அரசாங்கமோ வேறு எந்த அமைப்போ நிறுவனங்களின் வாங்குதல் மற்றும் விற்பனை நடவடிக்கைகளில் தலையிட முடியாது.
**விலை இயங்கு முறை :** விலை இயங்கு முறையானது முதலாளித்துவப் பொருளாதாரத்தின் இதயமாகும்.
**அரசின் பங்கு :** முதலாளித்துவப் பொருளாதாரத்தின், அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளையும் விலை இயங்கு முறையானது கட்டுப்படுத்துவதால், அரசின் பங்கு மிகக் குறைவாக இருக்கும்.
**வருமான ஏற்றத்தாழ்வு:** முதலாளித்துவ சமுதாயம் இரண்டு வகுப்பாகப் பிரிக்கப்படுகிறது. சொத்துகளை வைத்திருப்பவர்கள், சொத்துக்கள் இல்லாதவர்கள் எனப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

14) சமதரும குறைகளைக் கூறுக

**பதில் : சிவப்பு நாடா முறையும் அரசு அலுவலர்களும் (அதிகார வர்க்கம்) :**

அனைத்து முடிவுகளையும் அரசு அமைப்புகளே எடுப்பதால், அரசு அலுவலர்கள் பலரின் அனுமதி பெற வேண்டி, கோப்புகள் ஒரு மேசையிலிருந்து மற்றொன்றுக்கு செல்லும் கால அளவு அதிகமாகிறது. இதனால் சிவப்பு நாடா முறை ஏற்படுகிறது.

**ஊக்கமில்லாமை :**

சமதருமத்தின்மிகப்பெரிய குறை என்பது, இந்த முறையில் திறமைக்கு எந்த ஊக்கமும் அளிப்பதில்லை எனவே, உற்பத்தித் திறனும் பாதிக்கப்படும்.

**தெரிவு செய்வதில் சுதந்திரம் குறைவு:**

பண்டங்கள். பணிகள் நுகர்வதில் தெரிவு செய்யும் சுதந்திரம் நுகர்வோரால் அனுபவிக்க முடியாது.

**அதிகாரம் குவிதல் :**

அரசே அனைத்து முடிவுகளையும் எடுக்கிறது. பொருளாதார தீர்மானங்களில் தனியார் எந்த முயற்சியும் எடுப்பது இல்லை. எனவே, அரசே மிகவும் சக்தி வாய்ந்ததாக கருதப்படுகிறது. அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்த வாய்ப்பாகவும் அமைகிறது

15) கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக

**பதில் : சொத்து, உற்பத்திச் சாதனங்களின் உரிமம்:**

உற்பத்திச் சாதனங்களும், சொத்துகளும் தனியாருக்கும், பொதுத்துறைக்கும் சொந்தமாக இருக்கும்.

**பொதுத்துறையும், தனியார் துறையும் இணைந்திருக்கும்:**

கலப்புப்பொருளாதாரங்களில் தனியார்துறைகள், பொதுத்துறைகள் ஆகிய இரண்டும் இணைந்திருக்கும்.

**பொருளாதாரத் திட்டமிடல் :**

மையத் திட்டக்குழு பொருளாதாரத் திட்டங்களைத் தயாரிக்கும். அரசினால் தயாரிக்கப்படும் தேசியத் திட்டங்களை தனியார் துறையும் பொதுத்துறையும் மதித்து பின்பற்றும்.

**பொருளாதாரச் சிக்கல்களுக்குத் தீர்வு:**

எதனை உற்பத்தி செய்வது? எப்படி உற்பத்தி செய்வது? யாருக்காக உற்பத்தி செய்வது? எப்படிப் பகிர்ந்தளிப்பது எனும் அடிப்படைச் சிக்கல்களை விலை இயக்க முறை, அரசின் தலையீடு ஆகியவை மூலம் தீர்க்கப்படும்.


16) முதலாளித்துவத்தையும் சமத்தருமத்தையும் வேறுபடுத்துக.

**பதில் :**

| | முதலாளித்துவம் | சமத்துவம் |
|---|---|---|
| 1. | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை |
| 2. | இலாபம் | சமூக நலன் |
| 3. | தடையில்லா சந்தை முறை | ஒன்றிய அரசின் திட்டமுறை |
| 4. | மூலப் பொருள்கள் கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு |
| 5. | சமனற்ற நிலை | சமநிலை |

17) இரு துறை சுழல் ஓட்ட மாதிரியினை விளக்குக.

**பதில் :** இல்லத்துறை :
இல்லத்துறை தான் பண்டங்கள், பணிகளை வாங்கும் ஒரே துறையும், நிலம், உழைப்பு, மூலதனம், தொழில் அமைப்பு ஆகிய உற்பத்திக் காரணிகளை அளிக்கும் ஒரே துறையும் ஆகும். இல்லத்துறையானது அதற்குச் சொந்தமான உற்பத்திக் காரணிகளை அளிப்பதன் மூலம் வருமானம் பெறுகிறது.
நிறுவனத் துறை:
1. நிறுவனத்துறையானது பண்டங்கள் மற்றும் பணிகளை இல்லத்துறைக்கு விற்பனை செய்வதன் மூலம் வருவாயை ஈட்டுகின்றது.




இருதுறைப் பொருளாதாரத்தில், உற்பத்தி மற்றும் விற்பனை சமமாகவும் வருமானமும், பண்டங்களும் சுழல் ஓட்டமாகவும் காணப்படும்.
2. வெளிவட்டமானது உற்பத்திகாரணிகளையும் பண்டங்களையும் எடுத்துரைக்கும் உண்மை ஓட்டமாகவும், உள் வட்டமானது காரணி விலை, பண்டங்களின் விலையைக் குறிக்கும் பண ஓட்டமாகவும் காணப்படும். இங்கு $Y = C + I$
$Y$ என்பது வருவாய்: $C$ என்பது நுகர்வு; $I$ என்பது முதலீடு

18) சமத்துவ பொருளாதாரத்தின் நன்மை யாவை?

**பதில் :** 1. பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வுகள் குறைவு ஏற்படும், சுரண்டல் ஏற்பட வாய்ப்பு இல்லை.
2. மையத்திட்ட அதிகாரத்தால் திட்டமிட்டபடி வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது
3. ஏற்றத்தாழ்வுகள் குறைவாக இருப்பதால் பணக்காரர் மற்றும் ஏழைகளுக்கிடையேயான சண்டைகள் இருப்பதில்லை
4. வாணிக சூழலுக்கான ஒரு முடிவு ஏற்படும். உற்பத்தி மற்றும் பகிர்வு அரசாங்கம் முழு கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும்
5. சமூக நளனின் முன்னேற்றம் காணப்படும். மக்கள் நலன் உயர அரசு உதவி செய்வதால் ஏற்றத்தாழ்வு இல்லாத பொருளாதாரம் அமையும்

19) நான்குதுறை பொருளாதாரத்தின் வருவாய் ஓட்டத்தினை விளக்குக.

**பதில் :** (i) இல்லம்,நிறுவனம் மற்றும் அரசு இவற்றோடு வெளியுறவுத் துறையும் இணைக்கப்படுகிறது.
(ii) நான்கு துறை பொருளாதாரத்தில், ஒட்டு மொத்த செலவானது உள்நாட்டு செலவு $(C + I + G)$ மற்றும் நிகர ஏற்றுமதி $(X-M)$ ஐ உள்ளடக்கும்.
$Y = C + I + G + (X - M)$

20) பொருளாதார அமைப்புகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்.

**பதில் :** வளர்ச்சி நிலை: வளர்ந்த, வளராத, முன்னேறாத மற்றும் வளரும் பொருளாதாரங்கள்.
1. நடவடிக்கைகளின் முதலாளித்துவ, சமத்துவ கலப்பு பொருளாதாரங்கள்.
2. நடவடிக்கைகள் அளவு: சிறிய மற்றும் பெரிய பொருளாதார அமைப்புகள்.
3. செயல்படும் தன்மை: நிலையான மற்றும் இயங்கும் பொருளாதார அமைப்புகள்.
4.செயல்பரப்பு தன்மை: மூடிய மற்றும் திறந்தவெளி பொருளாதார அமைப்புகள்.
5. முன்னேற்ற தன்மை: பழைமையான மற்றும் நவீன பொருளாதார அமைப்புகள்.
6.தேசிய வருவாய் அளவு: குறைந்த வருவாய், இடைநிலை வருவாய், அதிக வருவாய்.

**5 மதிப்பெண் வினாக்கள்** $5 \times 5 = 25$

21) பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி.

**பதில் :** **நாட்டு வருமானம் :**

நாட்டு வருமானம் கணக்கிடுதல், நாட்டு வருமானத்தில் பல துறைகளின் பங்கு முதலானவை பேரியல் பொருளாதாரப் பகுத்தாய்வின் அடிப்படை கூறுகளாகும்.

**பண வீக்கம்:**

பண வீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதைக் குறிப்பதாகும். மொத்த விலைக் குறியீட்டெண். நுகர்வோர் விலைக் குறியீட்டெண், ஆகியவற்றைப் பயன்படுத்தி மொத்த விலை அளவை மதிப்பிடுவது அவசியமாக இருக்கிறது.

**வணிகச் சுழற்சி :**

பொதுவாக எல்லா நாடுகளும் வணிக ஏற்றத்தாழ்வாலும், வணிக சுழற்சியாலும் ஏற்படும் சிக்கல்களைச் சந்திக்கின்றன. மொத்த பொருளாதாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்டின் வணிகச் சுழற்சி மாற்றங்களைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

**வறுமையும் வேலையின்மையும்:**

வளங்கள் நிறைந்த நாடுகளிலும் வறுமையும். வேலையின்மையும் மிகப் பெரிய சிக்கலாக உள்ளது. இது ஒரு பொருளாதார முரண்பாடுகளில் ஒன்றாகும்.

**பொருளாதார வளர்ச்சி :**

பேரியல் பகுத்தாய்வின் மூலம் தான் ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சி, முன்னேற்றம், அவற்றைத் தீர்மானிக்கும் காரணிகள் ஆகியவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.

**பொருளாதாரக் கொள்கைகள்:**

பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்குவதற்குப் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது. அடிப்படை சிக்கல்களுக்குத் தீர்வு காணவும், தடைகளைத் தகர்த்தெறியவும், வளர்ச்சியை அடைவதற்கும் பொருளாதாரக் கொள்கைகள் தேவைப்படுகின்றன.

22) நடவடிக்கைகள் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி.

**பதில் :** 1. ஒரு பொருளாதாரத்தின் அடிப்படை நடவடிக்கைகள் உற்பத்தியும் நுகர்வும் ஆகும்.


2. இந்த இரு நடவடிக்கைகளுக்கு பல்வேறு பிற நடவடிக்கைகள் உதவுகின்றன.

3. இந்த நடவடிக்கைகளின் தலையான நோக்கம் வளர்ச்சியை அடைவதாகும். இந்த பரிமாற்ற நடவடிக்கையானது உற்பத்திக்கும் நுகர்வு பணிகளுக்கும் உதவுகின்றது.

4. இந்த நடவடிக்கைகள் பல்வேறு பொருளாதாரம், பொருளாதாரமற்ற நடவடிக்கைகளால் பாதிக்கப்படுகின்றன.

5. **முக்கியமான பொருளாதார (Economic Activities):**

போக்குவரத்து, வங்கிப்பணி, விளம்பரம், திட்டமிடல், அரசின் கொள்கை மற்றும் பிற பணிகள் ஆகும்.




6. **முக்கிய நடவடிக்கைகளாவன பொருளாதாரமற்ற (Non-Economic Activities):**

சுற்றுச்சூழல், உடல் நலம், கல்வி, பொழுதுபோக்கு, ஆட்சிமுறை, சட்டத்திட்டங்கள் முதலியன.

7. பிற பொருளாதாரத்தின் வெளி நடவடிக்கைகளான ஏற்றுமதி, இறக்குமதி, பன்னாட்டு உறவுகள், குடியேற்ற இடப்பெயர்ச்சிகள், அயல் முதலீடு, அயல் நாட்டு செலாவணி ஈட்டல் முதலான பொருளாதார அமைப்பின் மொத்தச் செயல்பாட்டையும் பாதிக்கின்றன.

23) முதலாளித்துவம், சமத்துவம் ஆகியவற்றின் இயல்புகளை ஒப்பிடுக.

**பதில் :**

| வ.எண் | தன்மைகள் | முதலாளித்துவம் | சமத்துவம் |
|---|---|---|---|
| 1 | உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை |
| 2 | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் |
| 3 | மைய பிரச்சனைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | ஒன்றிய அரசின் திட்டமுறை |
| 4 | அரசின் பங்கு | மூலப் பொருள்கள் கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு |
| 5 | வருமானப் பங்கீடு | சமனற்ற நிலை | சமநிலை |
| 6 | நிறுவன தன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் |
| 7 | பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை |
| 8 | முக்கியமான சிக்கல் | சமமின்மை | திறனின்மை |

24) முதலாளித்துவம், சமதருமம், கலப்புப் பொருளாதாரம் ஆகியவற்றின் தன்மைகளை ஒப்பிடுக

**பதில் :**

| தன்மைகள் | | முதலாளித்துவம் | சமத்துவம் | கலப்புத்துவம் |
|---|---|---|---|---|
| 1. | உற்பத்தி மூலங்களின் உரிமை. | தனியார் வசம் உள்ளது. | பொது துறை உரிமை. | தனியார் மற்றும் பொது துறை உரிமை. |
| 2. | பொருளாதார நோக்கம். | லாபத்தின் உச்ச நோக்கம். | சமூக நலன். | சமூக நலன் மற்றும் லாபநோக்கம். |
| 3. | மைய பிரச்சனைகளின் தீர்வு. | தடையில்லா சந்தைமுறை. | மத்திய திட்டக்குழு முறை. | மத்திய திட்டக்குழு முறை மற்றும் தடையில்லா சந்தைமுறை. |
| 4. | அரசின் பங்கு. | உள்ளீடு கட்டுப்பாடு மட்டும். | முழுமையான உற்பத்தி கட்டுப்பாடு. | குறைவான பங்கு. |
| 5. | வருவாய் பங்கீடு. | சமனற்ற நிலை பங்கீடு. | சமநிலை பங்கீடு. | குறையாத சமநிலையற்ற நிலை பங்கீடு. |
| 6. | நிறுவன தன்மை. | தனியார் நிறுவனமாகும். | அரசு நிறுவனமாகும். | தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் இனைந்து காணப்படுவைது. |
| 7. | பொருளாதார சுதந்திரம். | முழுமையான சுதந்திரம் காணப்படும். | சுதந்திரமின்மை காணப்படும். | கட்டுப்பாடுகளுடன் கூடிய சுதந்திரம் காணப்படும். |
| 8. | முக்கிய பிரச்சனையாக காணப்படுவது | சமமின்மை நிலை காணப்படும். | திறனின்மை நிலை காணப்படும். | சமமின்மை மற்றும் திறனின்மை நிலை காணப்படும். |

25) வருவாயின் வட்ட ஓட்டத்தின் விளக்குக.

பதில் : ஒரு பொருளாதார அமைப்பின் வருவாயின் வட்ட ஓட்டம் மாதிரியானது அந்த பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குவதாகும். இது பொருளாதார முகவர்களாகிய நிறுவனம், குடியிருப்பு, அரசாங்கம் மற்றும் நாடுகளுக்கிடையே வருவாய், பொருட்கள் மற்றும் பணிகள் மற்றும் உற்பத்தி காரணிகளின் ஓட்டத்தை காண்பிப்பதாகும். வருவாயின் வட்ட ஓட்டம் ஆய்வானது தேசிய கணக்குகள் மற்றும் பேரியல் பொருளாதாரத்தின் அடிப்படையாகும்.

**I. இரு துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்டம்:**

**1. இல்லத்துறை:** அதற்கு சொந்தமான உற்பத்தி காரணிகளை உற்பத்திக்கு அளிப்பதன் மூலம் வருவாயைப் பெறுகின்றது

**2. நிறுவனத்துறை:** நிறுவனத் துறையானது பொருள் மற்றும் பணிகளை இல்லத்துறைக்கு விற்பனை செய்வதன் மூலம் வருவாயைப் பெறுகின்றது

இருதுறை பொருளாதாரத்தில் உற்பத்தி மற்றும் விற்பனை சமமாகவும், வருவாய் மற்றும் பொருட்கள் வட்ட ஓட்டமாகவும் காணப்படும். ஆகவே

$y = C + I$

y என்பது வருவாய், C என்பது நுகர்வு, I என்பது முதலீடு

**II. மூன்று துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்டம்:**

(i) இல்லம் மற்றும் நிறுவனத் துறைக்கு மேலாக அரசுத்துறை சேரும் போது மூன்று துறை மாதிரி அமைகிறது. அரசானது இல்லத்துறை மற்றும் நிறுவனங்களில் வரி விதிக்கின்றனர். நிறுவனங்களிலிருந்து பொருள் மற்றும் பணிகளை வாங்குகின்றன.

(ii) மூன்று துறை மாதிரியின் தேசிய வருமானம் என்பது நுகர்வு செலவு முதலீட்டு செலவு மற்றும் அரசின் செலவு ஆகியவற்றைக் கூட்டுவதால் அடையலாம்

$y = C + I + G$

**III. நான்கு துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்டம்:**

நான்கு துறை பொருளாதாரத்தில் இல்லம், நிறுவனம், அரசு இவற்றோடு வெளியுறவுத் துறையும் இணைக்கப்படுகிறது. நிஜ வாழ்க்கையில் நான்கு துறை பொருளாதாம் காணப்படுகிறது

வெளியுறவுத் துறையில் அதிகமாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேர்ந்ததாகும்

$y = C + I + G + (X - M)$